இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 300 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 27 – சனிக்கிழமை 10 ஜீன் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 300 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 27 - Saturday 10 June 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக தலைநிமிர்ந்து கம்பீரமாக நின்று கொண்டு இருக்கிறது!

# தமிழ்நாடு அமைதி மாநிலமாக விளங்குவதால்தான் அதிக முதலீடுகள்!

## ஒரகடத்தில் ரூ.762 கோடி மதிப்பில் 4.0 தொழில்நுட்ப மையங்களைத் திறந்துவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**காஞ்சிபுரம், ஜீன் 10-**

**காஞ்சிபுரம் மாவட்டம் - ஒரகடத்தில், ரூ.762 கோடி மதிப்பில் 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 4.0 தொழில்நுட்ப மையங்களைத் திறந்து வைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு தலைநிமிர்ந்து கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது" என்றும், "அமைதி மாநிலமாக தமிழ்நாடு விளங்குவதால் அதிக முதலீடுகள் வருகின்றன" என்றும் குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.6.2023) ஒரகடத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை – டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து 21 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கொ.வீரராகவ ராவ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், டாடா சன்ஸ் குழும தலைவர் என்.சந்திரசேகரன், தலைமை செயல்அலுவலர் வாரன் ஹாரிஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.762.30 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

டாடா குழுமத்தின் தலைவர் மரியாதைக்குரிய என்.சந்திரசேகரன் அவர்கள் இங்கே வருகை தந்திருப்பதில் நமக்கெல்லாம் பெரிய மகிழ்ச்சி!

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு தமிழர், உலகின் தலைசிறந்த டாடா குழுமத்தின் தலைமைப் பொறுப்பில் அமர்ந்திருப்பதும் நாமக்கல் மாவட்டம் மோகனூரில் பிறந்து அரசுப் பள்ளிக்கூடத்தில் படித்து இந்தளவு முன்னேறி இருக்கிறார் என்பதும், தமிழ்நாட்டிற்கும் நமக்கும் மிகப்பெரிய பெருமையாக அமைந்திருக்கிறது. அறிவாற்றலும் திறமையும் இருந்தால் எத்தகைய உயரத்தையும் அடையலாம் என்பதற்கு இந்த மேடையில் அமர்ந்திருக்கும் என்.சந்திரசேகரன் அவர்களே சாட்சியாக இங்கே நமக்கு காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

தொழில் – வர்த்தகம் – நிறுவனம் ஆகியவற்றோடு தன்னுடைய ஆர்வத்தை நிறுத்திக் கொள்ளாமல் இசை, புகைப்படம் எடுத்தல் ஆகிய தனித்திறமைகளிலும் சிறந்தவராக அவர் இருக்கிறார். அனைத்தையும் விட, நியூயார்க் நகரத்தில் மாரத்தானில் கலந்து கொண்டு சாதனையும் படைத்தவர் அவர்.

வேகம், விவேகம், துடிதுடிப்பு ஆகிய தனது குணத்தை, தான் பங்கெடுக்கும் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றிக் காட்டிய மரியாதைக்குரிய என்.சந்திரசேகரன் அவர்களை இந்த நிகழ்ச்சியின் மூலமாக உங்கள் அனைவரின் சார்பில் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

## ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற நோக்கில் தமிழ்நாடு அரசு செயல்படுகிறது!

### பல்வகைப் பொருளாதாரம் கொண்ட மாநிலம்!

தமிழ்நாட்டு இளைஞர்கள், மரியாதைக்குரிய சந்திரசேகரன் அவர்களை எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டு முன்னேற்றம் காண வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

யார் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், யார் மறைத்தாலும் தமிழ்நாடு என்பது அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக தலை நிமிர்ந்து, ஏன் கம்பீரமாக இன்றைக்கு நின்று கொண்டு இருக்கிறது.

அனைத்துத் தொழில்களிலும் சிறந்த மாநிலமாக விளங்கும் நம்முடைய தமிழ்நாடு, தொழிற்சாலைகள் நிறைந்த பல்வகை பொருளாதாரத்துடன் கூடிய மாநிலம்!

ஆட்டோமொபைல்,

மின்னணு சாதனங்கள்,

தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள்,

நிதிச் சேவைகள், அது தொடர்பான நிறுவனம் (Fintech),

மின்னணு வாகனங்கள்,

தோல் சார்ந்த காலணி மற்றும் தோல் சாரா உற்பத்தித் தொழில்கள்,

வங்கி,

நிதி,

காப்பீடு மற்றும் சேவை நிறுவனங்கள்,

வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி,

பொறியியல்,

டெக்ஸ்டைல்ஸ்,

ஆடைகள் உற்பத்தி,

பிளாஸ்டிக் மற்றும் இரசாயன உற்பத்தி,

ஆகிய துறைகளிலும் தமிழ்நாடு இப்போது முன்னணியில் உள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட தொழில் துறை ஆண்டறிக்கையின்படி நம்முடைய இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. பணிபுரியும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். வளர்ந்து வரும் புதிய துறைகளிலும் தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது.

விண்வெளி மற்றும் பாதுகாப்பு,

வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்துதல்,

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வழிமுறைகள்,

மின்னணு வடிவமைப்பு,

### தமிழ்நாடு அபரிமிதமான வளர்ச்சி!

மருத்துவ மின்னணுச் சாதனங்கள் மற்றும் மின்சாரப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளின் மூலமாக உலகளாவிய வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாடு அரசின் Guidance Tamil Nadu அலுவலகத்தின் மூலமாக ஜனவரி

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## வீட்டு இணைப்புகளுக்கு எவ்வித மின்கட்டண உயர்வும் இல்லை!

# அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும்!

### அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜுன் 10 -*

*கடந்தகால ஆட்சியில் இருந்த திறனற்ற மேலாண்மையால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஒட்டுமொத்த நிதி நிலை மோசமாக பாதிப்படைந்து இருந்தது.*

*மேலும், ஒன்றிய அரசின் 9 நவம்பர் 2021 ஆணையின்படி மின் எரிபொருள் மற்றும் கொள்முதல் விலை உயர்வினை உடனுக்குடன் நுகர்வோரிட மிருந்து வசூல் செய்வது கட்டாயமாக்கப்பட்டது. மேலும், 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒன்றிய அரசு இட்ட ஆணையின்படி, இந்த விலை உயர்வினை மின் கட்டணத்தை உயர்த்தி நுகர்வோர்களிடமிருந்து மாதந்தோறும் பெற வேண்டும்.*



*இந்த விலை உயர்வினால் ஏற்படக்கூடிய சுமையைக் குறைக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 09.09.2022 அன்று 2022-23 முதல் 2026 - 27 வரை 5 ஆண்டுகளுக்கான கட்டண உயர்வை பல்லாண்டு மின் கட்டண வகையில் (MYT) வழங்கியது. மேற்படி உத்தரவில் 2022 - 23 ஆண்டுக்கான உயர்த்தப்பட்ட கட்டணத்தை அறிவித்தது.*

*அடுத்து வரும் 4 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 1 முதல் அமலுக்கு வரும் வகையில் கீழ்க்கண்ட கட்டண உயர்வு முறையை அறிவித்தது. அதன்படி, ஆண்டு தோறும், ஏப்ரல் மாதத்திற்கான நுகர்வோர் விலை குறியீட்டு எண்ணை முந்தைய ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் விலைக் குறியீட்டு எண்ணுடன் (Price Index) ஒப்பீடு செய்து, கணக்கிடப்படும் நுகர்வோர் பணவீக்க உயர்வு (Consumer Price Inflation) அல்லது 6%, இவற்றில் எது குறைவோ அந்த அளவில் மின்கட்டண உயர்வை நடைமுறை படுத்த வேண்டும்.*

*இதன்படி, 2023 ஜுலை மாதத்தைப் பொறுத்த வரையில், 2022 ஏப்ரல் மற்றும் 2023 ஏப்ரல் ஆகியவற்றின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்களின்படி கணக்கிட்டால், 4.7 சதவீதம் மின்கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இந்த நடைமுறையை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், மாண்பமை ஆணையத்தின் உத்தரவை செயல்படுத்தும் போது பொது மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். இதன்படி கட்டண உயர்வு விகிதம் மறுஆய்வு செய்யப்பட்டு,*

தொடர்ச்சி 3ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.6.2023) தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடியில் உள்ள முதலை முத்துவாரி வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்டு தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பழனிமாணிக்கம், ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா, நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.